செ.வெ.எண்: நாள்:17.09.19

**விருதுநகர் மாவட்டம்**
**இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) நிதிக்கு நன்கொடை பெற மாநில அளவில் தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி என்ற வங்கி கணக்கு தொடங்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சியர் தகவல்**

---

மாநில அரசின் சமூக பாதுகாப்புத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் - 2015-யினை மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இச்சட்டத்தின்கீழ் குழந்தைகள் இல்லங்களை பதிவு செய்தல், குழந்தைகளை தத்து வழங்குதல், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் இளஞ்சிறார்களுக்கு மறுவாழ்வு அளித்தல், குழந்தைகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கு மருத்துவம், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் இதர தேவைகளுக்கு உதவித்தொகை வழங்குதல், குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழித்தல் மற்றும் பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளை மீட்டு மறுவாழ்வு அளித்தல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்ற பணியினை அரசு நிதியின் மூலமாக சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் 2015, பிரிவு 105-ன்படி, அரசு அலுவலர்கள், பொது மக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களிடமிருந்து இளைஞர் நீதி நிதியினை நன்கொடையாக பெற்று குழந்தைகள் பாதுகாப்பு பணியினை மேலும் சிறப்பாக மேம்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியினை பெற மாநில அளவில் தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி என்ற பெயரில் வங்கி கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. இந்நிதியினை அளிக்க முன்வரும் நன்கொடையாளர்கள், TamilNadu Juvenile Justice Fund, Indian Overseas Bank, Rajarathinam Branch, Chennai, Account No. 358001000000671, IFSC Code: IOBA0003580 -என்ற வங்கி கணக்கில் செலுத்தலாம். மேலும், இது தொடர்பான விபரங்களை பெற மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 2/818-வ.உ.சி.நகர், சூலக்கரைமேடு, விருதுநகர், தொலைபேசி எண். 04562-252826 என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம் என விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**